1723 23

HISTORY OF INDIA

BOOK I

FOR STANDARD III

(TAMIL)

REGISTRAR ... 28 MAR 1940 MADRAS

BY

K. GOVINDACHARI, M.A., L.T.,
Superintendent, Primary Department, Sri. M. Ct. Muthiah Chettiar
High School, Madras.

B587
3721

THE EDUCATIONAL PUBLISHING CO.,
THYAGARAYANAGAR :: MADRAS
1939.

இந்து தேச சரித்திரம்

முதல் புத்தகம்

(மூன்றும் வகுப்புக்கு உரியது)

REGISTRAR OF BOOKS
28 MAR 1940
MADRAS

954

ஆசிரியர் :

K. கோவிந்தாசாரி M. A., L. T.

ஸூபரின்டென்டென்டு, பிரைமரி டிபார்ட்மென்டு,

Sir M. CT. முத்தையா செட்டியார் உயர்தர கலாசாலை, சென்னை.

3587

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி

தியாகராயநகர், சென்னை.

பதிப்புரிமை] 1939. [விலை அணா நான்கு

KABEER PRINTING WORKS
195, HIGH ROAD, TRIPLICANE

முகவுரை

REGISTRAR OF BOOKS
28 MAR 1940
MADRAS

'இந்து தேச சரித்திரம்' என்னும் இச் சிறு நூல், மூன்ரும் வகுப்புப் பிள்ளைகட்கு என்று எழுதப்பட்டது. இதில் உள்ள கதைகள், அவ்வகுப் புப் பிள்ளைகட்கு எளிதில் புரியும்படியான எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. கதைகளை விளக்கப் போதிய படங்கள் தரப்பட்டுள்ளன. இந்நூல், கல்வி அதிகாரிகள் அண்மையில் வெளியிட்டுள்ள பாட இயலின்படி (Syllabus) தயார் செய்யப்பட்டது. இந் நூல், பிள்ளைகட்குத் தேச உணர்ச்சியை ஊட்டும் என்று நம்புகிறேன்.

இங்ஙனம்,
K. கோவிந்தாசாரி.

பொருள் அடக்கம்

பொருள்		பக்கம்
1. நம் நாடு	...	1
இராமாயணம்		
2. இராமரது இளமைப் பருவம்	...	3
3. இராமரும் குகனும்	...	6
4. பரதர்	...	9
மஹா பாரதம்		
5. பாண்டவரும் கௌரவரும்	...	12
6. துரோணர்	...	13
7. பாரதப் போர்	...	15
8. அரிச்சந்திரர்	...	18
9. சிபிச் சக்ரவர்த்தி	...	21
10. கௌதம புத்தர்	...	25
11. அசோகர்	...	29
12. இராணி சம்யுக்தை	...	32
13. சித்தூர் மஹா ராணி—பத்மினி	...	35
14. பாபர்	...	39
15. நூர் ஜஹான்	...	41
16. தென்னிந்திய சரித்திரப் பெரியோர்கள்		
I. சோழநாடு :		
(1) கரிகால் சோழர்	...	44
(2) இராஜ ராஜ சோழர்	...	48
(3) இராஜேந்திர சோழர்	...	50
(4) குலோத்துங்க சோழர்	...	52

28 MAR 1940
MADRAS

II. பாண்டிய நாடு :

(1) சுந்தர பாண்டியர் ... 53

(2) திருமலே நாயக்கர் ... 55

(3) மங்கம்மாள் ... 57

III. பல்லவ நாடு :

நரசிம்ம வர்மன் ... 59

IV. சேர நாடு :

சேரன் செங்குட்டுவன் ... 62

17. புகழேந்திப் புலவர் ... 64

இந்து தேச சரித்திரம்

முதல் புத்தகம்

[மூன்றும் வகுப்புக்கு உரியது]

OF THE
28 MAR 1940
MAD

1. நம் நாடு

நாம் இருக்கும் மாகாணம் சென்னை மாகாணம். நமது தேசம் இந்தியா தேசம். இந்தியாவில் பல ஆறுகளும் மலைகளும் உண்டு. இத் தேசத்திற்கு வடக்கில் இமயமலை இருக்கிறது. அது பனியால் மூடப்பட்ட மலை. இந்தியாவில் சிந்து, கங்கை, கோதாவரி, கிருஷ்ணா, நர்மதை, காவேரி முதலிய நதிகள் ஓடுகின்றன.

ஆரியர்கள் முதல் முதல் வெளி நாட்டிலிருந்து இந்திய நாட்டிற்கு வந்தார்கள். அவர்கள் மிகவும் அழகானவர்கள்; உயரமாக இருந்தார்கள்; பெரிய கண்களும் அழகான மூக்கும் உள்ளவர்கள். அவர்கள் கங்கை, சிந்து என்னும் நதிகளின் கரைகளில் தங்கினார்கள்.


இந்து
தேசப்படம்.
ஆப்கானிஸ்தான்
காஷ்மீரம்
பஞ்சாப்
பலுசிஸ்தான்
ராஜபுதனம்
திபேத்து
ஐக்கியமாகாணம்
கங்கை
வங்காளம்
கல்கத்தா
கத்தியவார்
மத்தியமாகாணம்
கோதாவரி
பம்பாய்
ஐதராபாத்
மைசூர்
சென்னப்பட்டணம்
காவேரி
இலங்கை
வங்காளகுடாக்கடல்

1. இந்து தேசப் படம்

வட இந்தியாவில் ஆரிய அரசர்கள் பலர் இருந்தார்கள். அவர்களுள் சூரிய குலத்தைச் சேர்ந்த அரசர் சிலர்; சந்திர குலத்தைச் சேர்ந்தவர் சிலர். சூரிய குலத்தில் பிறந்தவர் இராமர். அவரைப் பற்றிச் சொல்லும் புத்தகம் ' இராமாயணம் ' என்பது. சந்திர குலத்தில் பிறந்தவர்கள் பாண்டவர்கள். அவர்கள் செய்தி 'பாரதம்' என்னும் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

கேள்விகள்

1. இந்தியாவில் பனியால் மூடப்பட்ட மலை எது?
2. இந்தியாவின் முக்கிய நதிகள் யாவை?
3. ஆரியர் யார்? அவர்களைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

இராமாயணம்

2. இராமரது இளமைப் பருவம்

பல ஆயிரம் வருடங்களுக்கு முன் 'தசரதர்' என்ற அரசர் ஒருவர் இருந்தார். அவர் அயோத்தி என்னும் நாட்டை ஆண்டு வந்தார். அவர் மிகவும் தெய்வ பக்தி உள்ளவர்; தைரியம் உள்ளவர். அவர் குடிகளை அன்பாக நடத்தி வந்தார். அவருக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்னும் மூன்று மனைவிமார் இருந்தனர்.

அரசருக்குப் பல வருஷங்களாகப் பிள்ளை இல்லை. அதனால் அவர் ஒரு பெரிய யாகம் செய்தார். அதன் பிறகு நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். கோசலை இராமரைப் பெற்றாள். சுமித்திரை இலட்சுமணன், சத்துருக்கனன் என்ற இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். கைகேயி பரதனைப் பெற்றாள். வசிஷ்டர்

2. தசரதர் யாகம்

என்ற முனிவர் இந்த நான்கு பிள்ளைகளுக்கும் கல்வி கற்றுக்கொடுத்தார். இவர்கள், எல்லாம் தெரிந்த அறிவாளிகளாக இருந்தார்கள்.

இப்படி இருந்த சமயத்தில் விசுவாமித்திரர் என்ற முனிவர் தசரதரிடம் வந்தார். அரசர் அவரை மரியாதையுடன் வரவேற்றார். அந்த

முனிவர் இராமரையும் இலட்சுமணரையும் தம்முடன் காட்டிற்கு அனுப்பும்படி அரசரைக் கேட்டார். அரசர் அந்த இரண்டு பிள்ளைகளையும் முனிவருடன் அனுப்பினர். இராமர் முனிவரிடமிருந்து பல ஆயுதங்களைப் பெற்ருர்; இராட்சதர்களைக் கொன்ருர். பிறகு முனிவரும் இரண்டு அரசகுமாரரும் மிதிலை நகரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இராமர் அங்கு இருந்த ஜனக மகாராஜன் மகளான சீதையை மணந்து கொண்டார்.

3. விசுவாமித்திரரும் ராமலக்ஷ்மணரும்

தசரதர்க்கு வயது அதிகம் ஆகிவிட்டது. அதனல் அவர், இராமருக்குப் பட்டம் கட்ட ஏற்பாடு செய்தார். அதை அறிந்த கைகேயி பொருமை அடைந்தாள்; தன் மகன் பரதனுக்குத் தான் பட்டம் கட்டவேண்டும் என்று அரசரிடம் வற்புறுத்தினள்; இராமரைப் பதினன்கு வருஷம் காட்

டிற்குப் போகச் செய்தாள். இராமர், சீதையுடனும் இலட்சுமணருடனும் காட்டிற்குச் சென்றார்.

கேள்விகள்

1. இராமருடைய தந்தை, தாய், சகோதரர், மனைவி, யாவர்?
2. இராமர் ஏன் காட்டுக்குச் சென்றார்?

3. இராமரும் குகனும்

இராமர் சீதையுடனும் இலட்சுமணருடனும் கங்கைக் கரை சேர்ந்தார். மூவரும் அங்கு ஒரு குடிசையில் தங்கி இருந்தார்கள். அந்த ஆற்றங் கரையில் **குகன்** என்ற வேடர் தலைவன் பழம், தேன், மாவு முதலிய தின்பண்டங்களைக் கொண்டுவந்து இராமரிடம் தந்தான். குகன் மிகவும் பக்தி விசுவாசம் உள்ளவன். அவன் தொழில் படகு ஓட்டுவது. அவன், இராமர் தூங்கும் பொழுது காவல் புரிந்தான். இராமர் எழுந்தவுடன், தம் வரலாறு முழுவதையும் குகனுக்குச் சொன்னார்.

அது கேட்டுக் குகன் இராமருக்கு எல்லாவித உதவியையும் செய்யக் காத்திருந்தான். அவன், இராமரைக் கங்கை ஆற்றங் கரையிலேயே சுகமாக இருக்கும்படி வேண்டினான். ஆனால் இராமர் குகனைப்

படகு ஒன்றைத் தயார் செய்யக் கட்டளையிட்டார். குகன் அப்படியே செய்தான். இராமர், தம்பியுடனும் மனைவியுடனும் ஓடத்தில் ஏறினர். உடனே குகன் ஓடம் செலுத்தினன். அந்தப் படகு அன்னப் பக்ஷியைப் போல நீந்திச் சென்று, அக் கரையைச்



4. குகன் ஓடம் செலுத்துதல்

சேர்ந்தது. இராமர், பக்கத்தில் இருந்த சித்திரகூட மலையில் சிறிது காலம் வசிக்க எண்ணினர்.

அப்பொழுது குகன், தன்னை விட்டு இராமர் போகக்கூடாது என்று கேட்டுக்கொண்டான். அவன் சொன்னதாவது:—

"இராமபிரானே! தங்களுக்குப் பணிவிடை செய்யக் காத்திருக்கிறேன். நான் காட்டிலேயே வசிப்பவன். எனக்குக் காட்டு வழிகள் நன்ருகத் தெரியும். நான் காய், கனி, கிழங்குகள், தேன் முதலியவைகளை வெகு விரைவில் கொடுக்க முடியும்; நீங்கள் தங்குவதற்கு ஓலைகளால் பர்ணசாலை அமைத்துக் கொடுக்கிறேன். நீங்கள் என்னை விட்டுப் போகக்கூடாது"—என்பதே.

இராமர் குகனைப் பார்த்து, "குகனே! நீ என் அரிய நண்பன்; என் தம்பி உன் தம்பி. எங்கள் நாடு உனக்குச் சொந்தம். நான், உன் அன்பைப் பாராட்டுகிறேன். நீ வருத்தப்படாதே; இங்கேயே தங்கி இரு; எங்கள் வனவாசம் முடிந்த பிறகு, உன்னிடம் திரும்பி வருகிறோம். நீ, எனக்கு உயிர் நண்பன்" என்று கூறிச் சித்திரகூடம் சென்ருர்.

நண்பன் என்ருல் குகனைப்போல் அல்லவா இருத்தல் வேண்டும்!

கேள்விகள்

1. குகன் யார்? அவன் இராமருக்கு எவ்விதம் உதவி செய்தான்?
2. அன்பு மிகுந்த இராமர் குகனுக்கு என்னல் சொன்னுர்?

4. பரதர்

பரதர், இராமரின் தம்பி என்று படித்திருக்கிறீர்கள் அல்லவா ? பரதர் இராமரிடம் விசுவாசம் உடையவர். அவருக்குப் பட்டம் கட்டிக்கொள்ள விருப்பம் இல்லை. தம்முடைய தாய், இராமரைக் காட்டுக்கு அனுப்பினதைக் கேட்டார். அவர் கடுங்கோபம் கொண்டார் ; கொடிய தம் தாயின் செயலைக் கேட்டு வருந்தினார் ; இராமர் காட்டுக்குச் சென்றதால் தசரதர் இறந்தார். இதையும் பரதர் அறிந்து வருந்தினார். பரதர், "நான் அயோத்தியில் இருக்கமாட்டேன் ; எனக்குப் பட்டமும் வேண்டாம்" என்று சொன்னார் ; இராமரை அழைத்து வரக் காட்டிற்குப் புறப்பட்டார். அவர் தம்பி சத்துருக்கனரும், தாய்மாரும், குரு, மந்திரிகள் எல்லோரும் காடு நோக்கிச் சென்றனர். ஒரு பெரிய சேனையும் பரதரைப் பின் தொடர்ந்து சென்றது.

குகன், பரதரைக் கண்டான் ; பரதர் இராமரைக் கொல்ல வருகிறார் என்று எண்ணினான் ; அதனால் பரதரை எதிர்க்க வந்தான் ; ஆனால், துக்கத்துடன் மரவுரி தரித்திருந்த பரதரைக் கண்டான் ; உடனே, தான் செய்தது குற்றம் என்று எண்ணினான் ; சித்திர கூட மலையில் இராமர் இருப்பதை அறிவித்தான். உடனே பரதர் முதலிய எல்லோரும் சித்திரகூடம் சென்றனர்.

இலட்சுமணர் இவர்களைக் கண்டு கோபம் கொண்டார். இராமர், இலட்சுமணரைக் கை அமர்த்தினர். பரதர் இராமரிடம் வந்தார்; இராமர் கால்களில் விழுந்தார்; கைகூப்பிக் கண்களில் நீர் பெருக நின்ருர். அவர் இராமரைப் பார்த்து, "அண்ண,

5. பரதரும் சத்ருக்கனரும் இராமர் காலில் விழுதல்

நீங்கள் எங்களை எல்லாம் விட்டு விட்டுக் காட்டுக்கு வரலாமா? தகப்பனர் தசரதச் சக்ரவர்த்தியும் துக்கத்தினல் இறந்தார். எனக்குப் பட்டம் வேண்டாம். நீங்கள் அயோத்திக்குத் திரும்பி வரவேண்டும்." என்று பணிவுடன் வேண்டினர்.

அதற்கு இராமர், "தம்பி, பரதா! நீ, மனவருத்

தப்படாதே. நான் பதினுன்கு வருடம் கழிந்த பிறகு தான் அயோத்திக்கு வரக்கூடும். அது வரையில் நீ அரசனுக இரு" என்முர்.

இதைக் கேட்ட பரதர் மன வருத்தத்துடன், "எனக்கு ஒன்றும் வேண்டாம். தங்கள் பாதுகையை எனக்குத் தரவேண்டும். நான் அயோத்திக்குப் போக மாட்டேன்; நந்திக் கிராமத்தில் இருப்பேன். நீங்கள், பதினுன்கு வருடங்கள் முடிந்ததும் வந்துவிடுங்கள்; அப்படி வராவிடில், நான் தீயில் விழுந்து இறப்பேன்" என்று கூறினர். பரதர் அன்பைக் கண்டு இராமர் மகிழ்ந்தார்; அவர் வேண்டியபடியே பாதுகையைக் கழற்றிக் கொடுத்தார். பரதர் அதைப் பெற்று, தலைமேல் தாங்கிக்கொண்டு நந்திக் கிராமத்தை அடைந்து அரசு நடத்தலானர்.

இராமர், பரதரிடம் கூறியபடியே பதினுன்கு வருடங்கள் கழிந்ததும் அயோத்திக்கு வந்தார்; அரசாட்சியை ஏற்றுக்கொண்டார்.

பிள்ளைகளே! பரதர் எவ்வளவு அன்பு மிகுந்த தம்பி என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

கேள்விகள்

1. பரதர் யார்? எப்படிப்பட்ட குணமுடையவர்?
2. பரதர் சரித்திரத்திலிருந்து நீங்கள் என்ன அறிகிறீர்கள்?

5. பாண்டவரும் கௌரவரும்

வட இந்தியாவில், அயோத்தியைப் போல, அஸ்தினபுரம் என்ற ஒரு நகரம் உண்டு. சந்திர வம்சத்து அரசர்கள் அங்கு ஆண்டு வந்தார்கள். அந்த வம்சத்தில் திருதராஷ்டிரன், பாண்டு என்று இரு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவனான திருதராஷ்டிரன் பிறவிக் குருடன். அதனால் இளைய



6. பஞ்ச பாண்டவர்கள்

வனான பாண்டுவே அஸ்தினபுரிக்கு அரசன் ஆனான். அவன் தன் அண்ணன் விருப்பப்படியே திறமையாக ஆண்டுவந்தான்.

பாண்டு ராஜனுக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் தருமன், பீமன், அர்ச்சுனன்,

நகுலன், சகாதேவன் என்பவர்கள். திருதராஷ்டி ரனுக்கு நூறு பிள்ளைகள் இருந்தார்கள். அவர் களுக்குக் கௌரவர் என்பது பெயர். பாண்டுவின் குமாரர் ஐவர்க்கும் பஞ்ச பாண்டவர் என்பது பெயர். இவர்கள் சரித்திர வரலாறு மஹா பாரதத்தில் கூறப்பட்டுள்ளது.

6. துரோணர்

அஸ்தினபுரத்தில் ஒரு நாள், திருதராஷ்டிர னுடைய நூறு பிள்ளைகளும் பாண்டுவின் ஐந்து பிள்ளைகளும் இரண்டு பிரிவாகப் பிரிந்து, பந்து ஆடிக்கொண்டு இருந்தார்கள். விளையாடும் போது பீமன் பந்தை எடுத்து வீசி எறிந்தான். அது வெகு தூரம் போய், ஒரு கிணற்றில் விழுந்தது. துரியோ தனன் பீமனைப் பார்த்து, "நீ எறிந்த பந்தை நீ தான் எடுத்துக் கொடுக்க வேண்டும்" என்று சொன் னான். அதற்குப் பீமன், "நான் எறிந்த பந்தை நீங்கள் ஏன் பிடிக்கவில்லை? பந்தை நான் எடுத்துக் கொடுக்கமாட்டேன்" என்று பதில் சொன்னான்.

அந்தச் சமயத்தில் துரோணர் என்ற வில்லாசிரி யர் அங்கே வந்தார். அவர் அர்ச்சுனன் கையில் தமது வில்லைக் கொடுத்தார்; ஒரு சுப்பலை எடுத்து அதில் தொடுக்கச் சொன்னார். அர்ச்சுனன் அப் படியே செய்து சுப்பலைப் பந்துக்கு நேராக எய்தான்;

அது பந்தில் தைத்துக்கொண்டது; அதன் பிறகு ஒன்றன் பின் ஒன்ருகப் பல சுப்பல்களை எய்தான். அவை ஒன்றன்மேல் ஒன்ருகத் தைத்துக்கொண்டு தரைமட்டத்திற்கு வந்தன. உடனே அவன் அந்தச்

7. அர்ச்சுனன் கிணற்றில் அம்பு எய்தல்

சுப்பல் கோவையை மெல்ல மேலே கிளப்பிப் பந்தைக் கிணற்றிலிருந்து எடுத்துவிட்டான். இதைக் கண்டு பாண்டவரும் கௌரவரும் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இராஜ குமாரர்கள் பீஷ்மரிடம் நடந்த செய்தியைச் சொன்னார்கள். அவர், துரோணரை வரவழைத்தார்; நூற்று ஐந்து இராஜ குமாரர்களுக்கும் வில் வித்தை கற்பிக்கும்படி வேண்டினார். அதன்படியே துரோணர் அவர்களுக்கு வில் வித்தை நன்றாகக் கற்பித்தார். அர்ச்சுனன் சிறந்த வில்லாளி ஆனான்.

கேள்விகள்

1. அர்ச்சுனன் எவ்வாறு தன்னுடைய வில் வித்தைத் திறமையைக் காட்டினான்?

7. பாரதப் போர்

துரியோதனன் மிகவும் கொடியவன்; மிகுந்த பொறாமை உள்ளவன்; பாண்டவர்களை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்று எண்ணினான். அதனால் அவன், அரக்கினால் ஒரு மாளிகை கட்டினான்; அதில் பாண்டவர்களை இருக்கச் செய்தான்; ஓர் இரவில் அதற்கு நெருப்பு வைத்துவிட்டான். பீமன் மிகுந்த பலம் உள்ளவன். அவன் எல்லோரையும் காப்பாற்றினான். பாண்டவர்கள் பாஞ்சால தேசத்திற்குப் போனார்கள்; அங்குத் திரௌபதியை மணம் செய்து கொண்டார்கள்.

அதன் பிறகு பாண்டவர்கள் அஸ்தினபுரம் வந்து சேர்ந்தார்கள். திருதராஷ்டிரன் அவர்களுக்குப்

பாதி நாடு கொடுத்தான். பாண்டவர் நாட்டுக்குத் தலை நகரம் இந்திரப்பிரஸ்தம். அதில் பாண்டவர்கள் பெருமையாக வாழ்ந்து வந்தார்கள்.

துரியோதனன், பாண்டவர்களை எப்படியாவது கெடுத்து விடவேண்டும் என்று எண்ணினான். அவன், தருமருடன் சூதாடி, நாடு நகரம் எல்லா வற்றையும் எடுத்துக்கொண்டான். பாண்டவர்கள்



8. தருமர் சூதாட்டம்

எல்லாவற்றையும் தோற்றுவிட்டார்கள். துரியோதனன் பாண்டவர்களுக்குப் பல விதத் துன்பங்களைச் செய்தான்.

'நாட்டைக் கொடுக்க மாட்டேன்' என்று துரியோதனன் சொன்னான். அதனால் பாண்டவருக்கும்

கௌரவருக்கும் பெரிய போர் நடந்தது. அந்தப் போருக்குப் பாரதப் போர் என்பது பெயர்.

பாரதப் போர் பதினெட்டு நாட்கள் நடந்தது. கிருஷ்ண பகவான் அந்த யுத்தத்தில் அர்ச்சுனனுடைய தேரைச் செலுத்தினார். கண்ணன் பாண்டவர்களுக்குப் பல உதவிகளும் செய்தார். கௌரவர் மாண்டு ஒழிந்தார்கள். பாண்டவர் கிருஷ்ணனுடைய உதவியால் வெற்றி அடைந்தார்கள்; சுகமாக நாட்டை ஆண்டுவந்தார்கள்.

9. கண்ணன்

தெய்வ பக்தி உள்ளவர்கள் கஷ்டப்பட மாட்டார்கள். கெட்ட புத்தி உள்ளவர்கள் அழிந்து போவார்கள். இதை இப்பாடத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளுகிறோம் அல்லவா ?

கேள்விகள்

1. மஹா பாரதப் போர் எதனால் ஏற்பட்டது ?

2. யாருடைய உதவியால் பாண்டவர்கள் ஜெயித்தார்கள் ?

8. அரிச்சந்திரர்

தேவேந்திரன் தேவர்களுக்குத் தலைவன். ஒரு நாள் தேவேந்திரன் தனது சபையில் உட்கார்ந்திருந் தான். அவனைச் சுற்றி ரிஷிகளும் தேவர்களும் இருந்தார்கள். அவன், சபையிலிருந்த ரிஷிகளைப் பார்த்து, "பூவுலகில் மெய்யே பேசும் அரசன் இருக் கிறானா?" என்று கேட்டான்.

இதைக் கேட்ட வசிஷ்ட மஹா ரிஷி, "அயோத்தியில் அரிச்சந்திரன் என்னும் மஹா ராஜன் ஆண்டு வருகிறான். அவன் எப்பொழுதும் சத்தியத்தையே பேசுவான்" என்றார்.

அதைக் கேட்டு விசுவாமித்திர முனிவருக்குக் கோபம் வந்தது. அவர் வசிஷ்ட மஹா ரிஷியின் விரோதி. அவர், "நான், எப்படியாகிலும் வசிஷ்டர் சொன்னதைப் பொய்யாக்கி விடுவேன். அரிச் சந்திரனைப் பொய் சொல்லச் செய்வேன்" என்று அழுத்தமாகக் கூறினார்.

விசுவாமித்திரர் கோபத்துடன் தமது ஆசிரமத் திற்கு வந்தார்; பிறகு அயோத்திக்குப் போய் அரிச் சந்திரரை ஒரு வரம் கேட்டார். அவர் "தரு கிறேன்" என்று வாக்களித்ததும், "எனக்கு ஒரு கோடி பவுன் கொடுக்க வேண்டும்" என்று கேட்டார். அரசர் கொடுக்கத் தயாரானபோது கௌசிகர், "பிறகு

வாங்கிக்கொள்வேன்” என்று கூறிச் சென்ருர்; சென்றவர், காட்டு மிருகங்களை அயோத்தியின் மீது ஏவினுர். அவை பயிர்களை அழித்தன. அரசர் அவற்றைக் கொன்ருர்.

பிறகு ரிஷி, தமக்கு நாடு வேண்டும் என்று கேட்டார். அரசர் சந்தோஷத்தோடு நாட்டைக் கொடுத்துவிட்டார். அரசர், தம் மனைவி சந்திரமதியுடன் நாட்டை விட்டுப் புறப்பட்டார். ‘நக்ஷத்திரேசன்’ என்ற ரிஷியின் சீடன், அரசரையும் அவரைச் சேர்ந்தோரையும் வருத்தினுன். அரசர், நக்ஷத்திரேசனுக்குக் கோடி பவுன் கொடுக்க வேண்டும். ஆனுல் அவடரிம் பணம் இல்லை. அதனுல் அவர் தம், மனைவியையும் ஒரே மகனுன லோகிதாசனையும் அடிமைகளாக விற்றுவிட்டார்; பிறகு தாம், சுடுகாட்டுக்காவல்காரன் வேலையை ஒப்புக் கொண்டார்; ஒரு நாள் அவர் மகன் பாம்பு கடித்து இறந்தான். சந்திரமதி அவனைச் சுடுகாட்டிற்குக் கொண்டு வந்தாள். அப்போது அரிச்சந்திரர், தம் யஜமானன் உத்தரவினுல் தம் மனைவியை வெட்டப் போனுர். அச்சமயத்தில், விசுவாமித்திரர் மனம் இரங்கித் தடுத்தார்; அரிச்சந்திரரது குணத்தை மெச்சினுர்; அவரைப் புகழ்ந்தார். அரசர் மகன் உயிர் பெற்று எழுந்தான். அரிச்சந்திரர் தேவர்களால் கொண்டாடப்பட்டுச் சுகமாக வாழ்ந்தார்.

பிள்ளைகளே! அரசருக்கு எந்த விதமான கஷ்டம் வந்தது, பார்த்தீர்களா! அப்பொழுதும் அவர்



10. அரிச்சந்திரர்

பொய் சொல்லாது இருந்ததால் அல்லவா பெரும் புகழ் அடைந்தார்!

கேள்விகள்

1. அரிச்சந்திர மஹா ராஜருடைய குணாதிசயங்கள் எவை?

2. அவர் எப்படி கஷ்டப்பட்டார்?

9. சிபிச் சக்ரவர்த்தி

சிபிச் சக்ரவர்த்தி சூரிய வம்சத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற அரசர். அவர் மிகவும் கருணை உள்ளவர்; நற்குணம் பொருந்தியவர். அவருடைய குடிகள் யாதொரு துன்பமும் இல்லாமல் சுகமாக வாழ்ந்து வந்தனர். அவர் ஜீவகாருண்யம் மிகுதியாக உடையவர். அவரை யாவரும் புகழ்ந்து கொண்டாடினர்.

அவர், ஒரு நாள் மாலையில் தமது சிங்காரத் தோட்டத்தில் உலாவிக்கொண்டு இருந்தார். அப்போது புரு ஒன்று அதிக வேகமாக ஓடி வந்தது. அது, ஒரு பருந்தினல் துரத்தி வரப்பட்டது. அந்தப் புரு அரசர் காலில் விழுந்தது. அரசர் அந்தப் புருவை அன்புடன் எடுத்தார்; சிறிது உணவு கொடுத்தார். அவர் புருவை நோக்கி, “நீ ஏன் நடுங்குகிருய்? நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்.” என்று சொன்னர்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட புரு, சந்தோஷத்துடன் இருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு பருந்து வேகமாய் அரசரிடம் வந்தது. அதுவே புருவைத் துரத்தி வந்த பருந்து. அது அரசரை நோக்கி, “அரசே! நான் இந்தப் புருவை வெகு தூரத்திலிருந்து துரத்திக்கொண்டு வந்திருக்கிறேன். பசியும் தாகமும் என்னை வருத்துகின்றன. ஆதலால் இப்புருவை என்னிடம் கொடுத்து விடுங்கள்” என்றது.

உடனே அரசர், " இப்புரு என்னைச் சரணம் அடைந்தது. அதனால் நான் இதைக் காப்பாற்ற வேண்டும். ஆதலால் உனக்கு வேறு மாமிசம் தருகிறேன். நீ அதை உண்டு, உன் பசியைத் தீர்த்துக்



11. சிபிச் சக்ரவர்த்தி

கொள் " என்றார். பருந்து அதைக் கேட்டு, " அரசே ! இந்தப் புருவின் நிறையுள்ள மாமிசம் தங்கள் உடம்பிலிருந்து அறுத்துக் கொடுத்தால் போதும் " என்று சொன்னது.

அதைக் கேட்டு சக்ரவர்த்தி மிகுந்த சந்தோஷம் அடைந்தார்; தராசின் ஒரு தட்டில் புருவை வைத்தார்; மற்றொரு தட்டில் தம் உடலிலுள்ள மாமிசத்தை அறுத்துப் போட்டுத் தூக்கினார்; ஆனால் அது புருவின் எடைக்குச் சமமாக இல்லை. அதனால், அரசர், உடலில் உள்ள சதையைச் சிறிது சிறிதாக அறுத்துப் போட்டார். அப்பொழுதும் எடை சரியாகவில்லை. பிறகு அரசர் தாமே அந்தத் தட்டில் ஏறி உட்கார்ந்தார். அப்போது, தராசின் இரண்டு தட்டுகளும் சமமாக நின்றன.

உடனே, பருந்து வேடம் தரித்திருந்த தேவேந்திரர், தம் உருவத்தை எடுத்துக்கொண்டார். அக்கினி பகவான் புரு உருவம் மாறி, நேரில் வந்து சிபிச் சக்ரவர்த்தியை ஆசீர்வாதம் செய்தார். எல்லாத் தேவர்களும் சிபியை வாழ்த்தினார்கள். சிபிச் சக்ரவர்த்தி இவ்விதமாகவே எல்லா உயிர்களிடமும் அன்பு பாராட்டிப் புகழ் பெற்றார்.

கேள்விகள்

1. சிபிச் சக்ரவர்த்தி மிகவும் கருணையுள்ளவர் என்பது நமக்கு எப்படித் தெரிகிறது?

2. பருந்து அரசரிடம் என்ன சொல்லிற்று? பருந்து உருவம் தரித்தவர் யார்?



10. கௌதம புத்தர்

(படத்தின் வரலாறு)

1. புத்தர் தாயார் கபில வஸ்துவில் கண்ட கனவு.

2. புத்தர் பராக்கிரமம்—யானையை எறிதல்.

3. உயிர்கள் மீது இரக்கம் கொண்டு அன்னப் பறவையைக் காத்தல்.

4. புத்தர் வயது முதிர்ந்த கிழவரைப் பார்த்து மனவருத்தப்படுதல்.

5. புத்தர் கபில வஸ்துவில் மனைவி மக்களை விட்டுப் பிரிதல்.

6. புத்தர் காசியில் தவம் செய்தல்.

7. புத்தர் கயையில் ஞான உதயம் பெறுதல்.

8. புத்தர் காஞ்ஜ் முதலிய இடங்களில் மதப் பிரசாரம் செய்தல்.

9. புத்தர் பிந்துசாரன் யாகத்துக்குப் பலியிடக் கொண்டுபோன ஆடுகளைக் காப்பாற்றுதல்.

10. புத்தர் குசிஞகரத்தில் மரணம் அடைதல்; சிடர்கள் வருத்தப்படல்.

11. அசோகர் சாஞ்சியில் கட்டிய ஸ்தூபி.

'சுத்தோதனர்' என்பவர் ஓர் அரசர். அவர் இமயமலை அடிவாரத்தில் ஒரு நாட்டை ஆண்டு வந்தார். அவரது நாட்டின் தலை நகரம் கபில வஸ்து. அவர் மனைவியின் பெயர் மாயா தேவி. சுத்தோதனருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குச் சித்தார்த்தர் என்பது பெயர். சித்தார்த்தர் மிகவும் சுகமாக வளர்ந்து வந்தார்.

அவர் யசோதரை என்ற இராஜ குமாரியை மணம் செய்துகொண்டார். அவருக்கு ஒரு குழந்தை பிறந்தது. ஆனால் அவருக்கு மனத்தில் சந்தோஷம் இல்லை. அவர், ஜனங்கள் பட்ட கஷ்டங்களைப் பார்த்து மிகவும் வருத்தப்பட்டார்; அவர்கள் கஷ்டத்தை நீக்க விரும்பினர். அவர் அதைப் பற்றி யோசிக்கத் தம் மனைவியையும் அரண்மனையையும் விட்டுக் காட்டுக்குப் போனர். அவர் அங்கே ஒரு மரத்தின் கீழே உட்கார்ந்து தவம் செய்தார். அப்போது அவருக்கு ஞானம் பிறந்தது. அப்போது அவர் புத்தர் என்னும் பெயர் பெற்றர். அவர், தாம் அறிந்த உண்மைகளைப் பல வருஷகாலம் மக்களுக்கு எடுத்துக் கூறினர். அவர் மதம் புத்த மதம் என்பது. அவருக்குப் பல சீடர்கள் இருந்தார்கள். அவர்கள் வெளி நாடுகளுக்குப் போனர்கள்; புத்த மதத்தைப் பரவச் செய்தார்கள்.

சித்தார்த்தர் வெளியாக்கின உண்மைகள் : "உலகம் பல துன்பங்கள் நிறைந்தது. உலகத்தில் உள்ள பொருள்கள் மீது அதிக ஆசை வைக்கக் கூடாது. நாம் எண்ணம், பேச்சு, செயல் இந்த மூன்றிலும் சுத்தமாக இருக்க வேண்டும்; உயிர்களைத் துன்பம்



13. கௌதமர் இல்லம் துறத்தல்

செய்யக் கூடாது; எல்லோரையும் நம் சகோதரர் போல நடத்த வேண்டும்" என்பன.

இவர் மதம் இலங்கை, சீனு, ஜப்பான் முதலிய தேசங்களில் பரவிற்று. இந்தியாவில் ஸ்தூபிகளும்,

கோபுரங்களும்,புத்தச் சின்னங்களும் பல இடங்களில் காணப்படுகின்றன. புத்தர் மிகவும் கீர்த்தி பெற்றவர்; புதிய மதத்தைப் பரவச் செய்தவர். அந்த மதத்துச்



14. புத்தர்—ஞானவான்

சந்யாசிகள் இன்றும் ஜனங்களுக்கு உதவி செய்கிறார்கள்.

கேள்விகள்

1. புத்தர் வெளியாக்கின உண்மைகள் எவை?

2. புத்தரின் ஜீவியப் படத்தைப் பார்த்து ஒவ்வொரு படத்தின் கருத்தையும் சொல்லவும்.

11. அசோகர்

அசோகர் நமது தேசத்தை நீதி தவருமல் ஆண்டு வந்தவர். அவர் மௌரிய வம்சத்தைச் சேர்ந்தவர். அவர் புத்திமான். அவர் பலவிதமான நன்மைகள் செய்தார்; முதல் முதல் பல நாடுகளை ஜெயித்தார்; பெரிய சக்ரவர்த்தி ஆனூர்.

கலிங்கம் என்று ஒரு தேசம் இருந்தது. அசோகர் அதன்மீது படை எடுத்தார். அங்கே நடந்த போரில் அநேகர் அடிபட்டு இறந்தார்கள். எங்குப் பார்த்தாலும் வீரர்கள் கீழே விழுந்து கஷ்டப் பட்டார்கள். அசோகர் இவற்றைப் பார்த்தார்; மிகவும் மன வருத்தப்பட்டார்; "இனிமேல் சண்டைக்குப் போகமாட்டேன்" என்று சத்தியம் செய்தார். அவர், அது முதல் உயிர்களின்மீது அன்பு காட்டினூர்.

அவர், வேட்டை ஆடி மிருகங்களைக் கொல்லக் கூடாது என்று கட்டளையிட்டார்; "பக்ஷிகளையும் மிரு

கங்களையும் கொல்வதால் மிகுந்த துன்பம் ஏற்படும். அதனல் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு பாராட்ட வேண்டும்" என்ருர்.

அவர் பல நாடுகளுக்கு யாத்திரை செய்தார்;



15. கலிங்க யுத்தம்

புத்த மதத்தைத் தழுவிய சந்யாசிகளை வெளி நாடுகளுக்கு அனுப்பினர்; குடிகளுக்காகப் பல நன்மைகள் செய்தார்; வைத்திய சாலைகளைக் கட்டினர்; மிருகங்களுக்கும் வைத்திய சாலைகள் ஏற்படுத்தினர்;

பெரிய சாலைகளை உண்டாக்கினர்; பிரயாணிகள் சுக மாகத் தங்கிப் போவதற்கு மடங்களைக் கட்டினர்; தண்ணீர்ப் பந்தல்களை அமைத்தார்; சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்களை வளர்த்தார்.

அசோகர் மிகவும் புகழ் பெற்றவர். அவர் பெயர் உலகம் முழுவதும் பரவிற்று. இலங்கை முத லிய தேசங்களில் அவர் பெயரை இன்றும் கொண் டாடுகிறார்கள். அவர் நல்ல குணங்கள் உடையவர். 'தர்ம அசோகர்' என்றும் அவருக்குப் பெயர் உண்டு. பிள்ளைகளே! அவர், பிறர் நன்மைக்கு உழைத்த பெரிய புத்த மதச் சக்ரவர்த்தி ஆவார்.

கேள்விகள்

1. அசோகர் யார்?
2. அசோகருடைய குணங்கள் எவை?
3. அசோகர் கலிங்க யுத்தத்திற்குப் பிறகு என்ன சத்தியம் செய்தார்?
4. அசோகர் செய்த நன்மைகள் யாவை?

12. இராணி சம்யுக்தை

இராஜபுதனத்தில் இருப்பவர்களுக்கு இராஜ புத்திரர் என்பது பெயர். அவர்கள் மிக்க தைரியம் உள்ளவர்கள். இராஜபுத்திரப் பெண்கள் மிகுந்த அழகுள்ளவர்கள்.

கன்னேசி இராஜ்யம் ஒரு பெரிய இராஜபுத்திர நாடு. அந்த இராஜ்யத்தின் அரசர் ஜயச் சந்திரர். அவர் மிகவும் பொருமை உடையவர். அவருக்குச் சம்யுக்தை என்ற மகள் இருந்தாள். அவள் மிகவும் அழகான பெண்.

பிருதிவி ராஜர் என்ற ஓர் அரசர் டில்லியும் ஆஜ்மீரும் சேர்ந்த இராஜ்யத்தை ஆண்டு வந்தார். அவர் மிக்க தைரியசாலி. அவர் கீர்த்தியைச் சம்யுக்தை அறிந்தாள். அவள் அவரையே மணந்து கொள்ள விரும்பினுள். ஆனுல், அவர் ஜயச்சந்திர ருக்கு விரோதி.

ஜயச்சந்திரர் ஒரு பெரிய யாகம் செய்தார். அதற்கு எல்லா அரசர்களும் வந்தார்கள். ஆனுல் பிருதிவி ராஜர் வரவில்லே. அதனுல் ஜயச்சந்திரர் கோபம் கொண்டார்; பிருதிவி ராஜரைப் போல் ஒரு மண் பொம்மை செய்தார்; அதைக் காவல்காரன் போல் வாசலில் வைத்தார். ஜயச்சந்திரர், பிருதிவி ராஜரை அவமானப் படுத்தவே இவ்வாறு செய்தார்.

யாகம் முடிந்தது. உடனே சம்யுக்தையின் சுயம் வரம் நடக்க ஆரம்பித்தது. ஜயச்சந்திரர், தம் மகளை, வந்திருந்த அரசர்களுள் ஒருவரை மாலை யிட்டு மணக்கும்படி சொன்னர்.

16. பிருதிவியும் சம்யுக்தையும்

பிருதிவி ராஜர் சம்யுக்தையை மணம் புரிய எண் ணினர். சம்யுக்தையும் பிருதிவியைத்தான் மணம்

புரிய ஆவலுடன் இருந்தாள். பிருதிவி ராஜர் சபா மண்டபத்திற்கு வரவில்லை; வெளியே மறைந்திருந் தார். இராஜ குமாரி, வந்திருந்த அரசர்கள் எல்லோ ரையும் பார்த்தாள். அவள் ஒருவர் கழுத்திலும் மாலை இடவில்லை; மண்டப வாசலில் பிருதிவி ராஜரது மண் உருவம் இருந்ததைக் கண்டாள்; அதற்கு மணமாலை சூட்டினுள்.

அங்கு மறைந்திருந்த பிருதிவி ராஜர், உடனே சம்யுக்தையைத் தூக்கினுர்; தம் குதிரை மேல் வைத்துக்கொண்டார்; அதிக வேகமாக வெளியில் சென்ருர். இதைக் கண்ட ஜயச்சந்திரர், பிருதிவி ராஜரைப் பின் தொடர்ந்து தாக்க முயன்ருர். அது பயன்பெறவில்லை. பிருதிவி ராஜர் தம் அரண்மனையை அடைந்தார்; அங்குச் சம்யுக்தையை முறைப்படி மணம் செய்துகொண்டார். அவர்கள் சுகமாகச் சிறிது காலம் வாழ்ந்தார்கள்.

இதனுல் ஜயச்சந்திரருக்குப் பிருதிவி ராஜரிடம் இருந்த விரோதம் அதிகமானது. அப்போது 'கோரி முகம்மது' என்னும் மகம்மதிய அரசர் இந்தியாவுக்கு வந்தார். ஜயச்சந்திரர் அவருடன் சேர்ந்து, பிருதி வியைத் தோற்கடித்தார். பிருதிவி ராஜர் மிக்க தைரிய மாகச் சண்டையிட்டுப் போர்க்களத்தில் இறந்தார். அவரது அருமை மனைவி, கணவன் இறந்ததைக்

கேட்டாள்; தீமூட்டி அதில் விழுந்து, இறந்தாள். அவள் அல்லவா வீர அரசி!

கேள்விகள்

1. இராஜபுத்திரர் யாவர்?
2. இராஜபுத்திரர்களின் குணாதிசயங்கள் என்ன?
3. பிருதிவிராஜர் யார்? அவர் ஆவல் எது?
4. பிருதிவி ராஜருக்கும் ஜயச்சந்திரருக்கும் ஏன் விரோதம் ஏற்பட்டது?

13. சித்தூர் மஹா ராணி—பத்மினி

நீங்கள், இராஜ புத்திரர்களின் வீரச் செயலை முன் பாடத்தில் படித்தீர்கள் அல்லவா? அவர்களைப்போலவே இராஜபுத்திர ஸ்திரீகளும் மானம் உள்ளவர்கள்; எதிரிகள் வசம் அகப்படுவதை விட உயிரை விட்டுவிடுபவர்கள்.

17. அலாவுத்தீன்

டில்லி ராஜ்யத்தில் அலாவுத்தீன் கில்ஜி என்ற மகம்மதிய அரசர் ஆண்டு வந்தார். அவர் சித்தூர் இராஜ்யத்தை ஜெயிக்க எண்ணினர்; பெரிய சேனையுடன் சண்டை செய்ய வந்தார்.

பீம்சிங்கு என்ற இராஜபுத்திர வீரர் சித்தூர் அரசர். அவர் மிகவும் தைரியத்துடன் அலாவுத்தீனை எதிர்த்துச் சண்டை யிட்டார். இராஜபுத்திர வீரர் பலர் சண்டையில் இறந்தனர். அலாவுத்தீன், பீம்சிங்கு



18. பீம்சிங்கு

மனைவியான பத்மினியைக் கண்ணால் பார்க்கவேண்டும் என்று எண்ணினர்; கண்ணாடியில் அவள் உருவத்தைப் பார்த்தவுடன் அவளையே பிடித்துக் கொள்ள எண்ணினர்; அதற்காகப் பீம்சிங்கைத் தந்திரமாய்ப் பிடித்துக்கொண்டார்.

பத்மினி தன் கணவனை நம்பின தேவி. அவள் ஓர் உபாயம் செய்தாள் : அறுநூறு பல்லக்கு

19. பத்மினி

களில் இராஜபுத்திர வீரர்களை வைத்து வெளியே வந்தாள். பத்மினி பெண் பிள்ளைகளுடன் தன்னிடம் வருகிருள் என்று அலாவுத்தீன் எண்ணினுர். பல்லக்குகள் அருகே வந்தன. அவற்றிருந்து இராஜபுத்திர வீரர்கள் வெளியே குதித்தார்கள் ; அலாவுத்தீன் சேனையைத் தாக்கினுர்கள் ; தங்கள் அரசரை விடுவித்தார்கள்.

பிறகு கடும்போர் நடந்தது. பீம்சிங்கும் அவருடைய வீரர்களும் கடுமையாகச் சண்டை யிட்டார்கள்; ஆனுல் தோல்வி அடைந்தார்கள். அலாவுத்தீன் சித்தூர்க் கோட்டையைப் பிடித்தார். பீம்சிங்கும் இராஜபுத்திர வீரர்களும் இறந்தார்கள். இதைக் கண்ட பத்மினி, ஒரு பெரிய தீமூட்டி இறந்தாள். அவளுடன் மற்ற இராஜபுத்திர ஸ்திரீகளும் இறந்தார்கள். அலாவுத்தீன் கோட்டைக்குள் வந்தார் ; பெண்கள் இறந்து சாம்பலாய்ப் போனதைக் கண்டார்.

இதனுல் தெரிவன : 'இராஜபுத்திர ஸ்திரீகளும்

கணவரைப் போலத் தைரியசாலிகள்; தங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்பவர்கள்; எதற்கும் அஞ்சாதவர்கள்' என்பன.



20. அல்லாவுத்தீன், பத்மினியைக் கண்ணுடியில் காணல்; இராஜ புத்திர ஸ்திரீகள் தீக்குளிதல்.

கேள்விகள்

1. பீம்சிங்கு யார்? அவர் மனைவி யார்?
2. இராஜபுத்திரர், தம் அரசனை எப்படி விடுவித்தார்கள்?
3. பத்மினி ஏன் தீக்குளித்தாள்?
4. மற்றப் பெண்கள் ஏன் தீக்குளித்தார்கள்?

14. பாபர்

பாபர் இந்தியாவுக்கு வெளியே இருந்த அரசர். அவர் மிகவும் தைரியசாலி; வெகு நன்ருய்க் குதிரைச் சவாரி செய்வார்; தேகப் பயிற்சியில் தேர்ச்சி அடைந்தவர்; வெள்ளம் நிறைந்த ஆறுகளைப் பயம் இல்லாமல் நீந்துபவர். அவர், இந்தியாமீது படையெடுத்து வந்தார்.

அப்போது டில்லியில் இப்ரஹீம் லோடி என்னும் அரசர் ஆண்டுகொண்டு இருந்தார். பாபர், அந்த அரசரைப் 'பானிபட்' என்னும் இடத்தில் தோற்கடித்து, டில்லிக்குச் சக்கரவர்த்தி ஆனுர்; வட இந்தியா முழுவதையும் ஜெயித்துப் புகழ்பெற்ற அரசராக ஆண்டு வந்தார்.

அவருடைய மூத்த குமாரர் ஹுமாயூன் என்பவர். அவரிடத்தில் பாபருக்கு மிகுந்த பிரியம் உண்டு. ஏனென்ருல், ஹுமாயூன் பாபரின் அருமைப் புதல்வன். சில வருஷங்களுக்குப் பிறகு ஹுமாயூனுக்கு நோய் கண்டது. அவர் இறந்து போகும் நிலையில் இருந்தார். பாபர் மிகவும் தெய்வ பக்தி உள்ளவர். அவர், நோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஹுமாயூனுக்கு அருகில் வந்தார்; "ஏ தெய்வமே! கருணை மூர்த்தியே! என் மகனைக் காப்பாற்ற வேண்டும். அதற்குப் பதிலாக எனக்கு

நோய் வரட்டும். நான் மரணமடையத் தயாராக இருக்கிறேன்" என்று கடவுளை வேண்டினார்.

கடவுள் மனம் இரங்கினார்; பிள்ளையின் நோயைத் தீர்த்தார். தகப்பனாருக்கு நோய் வந்தது.



21. பாபர் பிரார்த்தனை செய்தல்

பிள்ளையின்மீது அன்புள்ள தகப்பனார் இறந்தார். ஹுமாயூன் சுகமாக இருந்தார்.

பிள்ளைகளே! பாபர் சக்கரவர்த்தி, பிள்ளையின் மீது மெய்யன்பு உடையவர். அப்பிள்ளைக்காகத்

தம் உயிரையும் துறந்தார். பிள்ளையும் தந்தையாரிடம் மெய்யன்பு உடையவர். அவரைப் போலவே நாமும் நம் தகப்பனாரை அன்புடன் நடத்தவேண்டும்; நீங்கள் பெரியவரான பின், உங்கள் பிள்ளைகளையும் அன்புடன் நடத்த வேண்டும்.

கேள்விகள்

1. பாபர் யார்?
2. பாபரின் குணாதிசயம் என்ன?
3. பாபர் தம் மகனிடம் வைத்துள்ள அன்பு நமக்கு எப்படித் தெரிகிறது?

15. நூர் ஜஹான்

ஜஹாங்கிர் என்ற மொகலாய சக்கரவர்த்தி டில்லியை அரசாண்டு வந்தார். அவர் நற்குணம் உடையர்; தைரியசாலி. ஆனால் அவர் தம் எதிரிகளிடம் கடுமையாக நடந்தார். அவர் சிறு வயதில் ஓர் அழகிய பெண்மணியைக் கண்டார். அவர் மின்னல் கொடியைப் போல் அழகுள்ளவர்; வெகு புத்திசாலி. அவர் பெயர் நூர் மஹால் அல்லது நூர் ஜஹான் என்பது.

22. ஜஹாங்கிர்

நூர் மஹால் என்ற அழகுள்ள பெண்ணின் தகப்

பனுர் பாரசீகத்திலிருந்து இந்தியாவிற்கு வந்தவர். அவர் வரும் வழியில் பல கஷ்டங்களை அனுபவித்தார். வரும் வழியில், ஒரு பெரிய பாம்பு குழந்தைக்கு நிழல் கொடுத்ததாம். அதனுல் அந்தக் குழந்தை பெரிய இராணியாக இருப்பது நிச்சயம் என்று ஜனங்கள் எண்ணினுர்களாம்.

அவர்கள் நினைத்தது மெய் ஆயிற்று. ஜஹாங்கிர் நூர் மஹாலை மணம் புரிந்தார்; நல்ல நிலைமையில் வைத்திருந்தார்; எல்லாச் சுகங்களும் அவருக்கு அளித்தார். அவரே இராஜ்யத்தை நடத்தி வந்தார். எல்லாரும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தார்கள்.

23. நூர் ஜஹான்

அவர் மிகவும் தயை உள்ளவர்; வீர குணம் உள்ளவர்; கணவரிடம் மெய்யன்பு உடையவர்; அனுதையான பெண் பிள்ளைகள் கல்வி கற்க உதவி செய்தார்; பல ஏழைப் பெண்களுக்குத் தம் பணம் செலவழித்துத் திருமணம் செய்து வைத்தார்.

ஜஹாங்கிர், ஷாஜஹானுல் தோற்கடிக்கப் பட்டார். பிறகு அவர், நோயால் இறந்தார். நூர்ஜ

ஹான் மிக்க வருத்தம் அடைந்தார்; தம் பணத்தை ஏழைகளுக்கு உதவி செய்து வந்தார். நூர் மஹால் என்றால் 'அரண்மனையின் பிரகாசம்' என்பது பொருள்.

கேள்விகள்

1. நூர்ஜஹான் இளமைப் பருவத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

2. நூர்ஜஹான் குணாதிசயம் என்ன?

16. தென் இந்திய சரித்திரப் பெரியோர்கள்

I. சோழ நாடு

சோழ நாடு என்பது காவேரி ஆற்றுக்கு இரு பக்கத்திலும் இருக்கும் நாடு. இந்த நாட்டைச் சோழ மண்டலம் என்றும் சொல்வது உண்டு. இப்பொழுது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி என்று வழங்கும் ஜில்லாக்கள் அடங்கிய நாடே சோழ நாடு ஆகும்.

காவேரி ஆறு மிகவும் பயன் உள்ளது. அது மேற்கே மைசூர் தேசத்தில் உற்பத்தியாகிக் கிழக்குப் பக்கம் ஓடுகிறது. காவேரி ஆற்றுப் பாய்ச்சலினுல் இந்த நாடு மிகவும் செழிப்பாக இருக்கிறது. சோழ அரசர்களுள் கரிகாலர், இராஜராஜர், இராஜேந்திரர் முதலியவர்கள் மிகவும் புகழ் பெற்றவர்கள்.

(1) கரிகால் சோழர்

இவர் பெரும் புகழ் பெற்ற சோழ அரசர். இவர் காலத்தில் உறையூர், சோழ ராஜ்யத்திற்குத் தலை நகரமாய் இருந்தது. கரிகாலர் இளம் பருவத்தில் மிகவும் அழகும் தைரியமும் உள்ளவராக இருந்தார். இவர் திறமையுடன் போர் செய்வதில் வல்லவர். அப்படி

இருந்தும் இவர், தம் எதிரிகளுக்குப் பயந்து, கரூரில் இருந்தார். உறையூரில் இருந்த ஜனங்கள், தங்களுக்குத் தகுந்த அரசன் இல்லையே என்று மனம் வருந்தி இருந்தார்கள்.



24. யானை கரிகாலருக்கு மாலை இடுதல்

அவர்கள் நல்ல அரசனைக் கண்டு பிடிப்பதற்காக அரசாங்க யானையை நன்றாக அலங்கரித்தார்கள்; அதன் துதிக்கையில் ஒரு மாலையைக் கொடுத்தார்கள்; தக்க அரசனைக் கண்டு பிடித்து வருமாறு அனுப்பி வைத்தார்கள். அந்த யானை பல

ஊர்களுக்குப் போயிற்று. தகுந்த அரசன் கிடைக்க வில்லை. அது கடைசியில் கரூருக்கு வந்து சேர்ந்தது. அங்கே விளையாடிக்கொண்டு இருந்த கரிகாலர் கழுத்தில் மாலையைப் போட்டது; அவரைத் தூக்கித் தன் மீது வைத்துக்கொண்டு உறையூருக்குத் திரும்பி வந்தது. அதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்; கரிகாலரை உடனே அரசர் ஆக்கினார்கள்.

கரிகாலருக்கு எதிரிகள் பலர் இருந்தனர். அந்த எதிரிகள் அவர் இருந்த வீட்டிற்கு நெருப்பு வைத்தார்கள். அவருடைய இரண்டு கால்களும் நெருப்பில் கரிந்து போயின. அதனால் தான் அவருக்குக் 'கரிகாலர்' என்ற பெயர் வந்தது.'

ஆனால் அவருக்கு வயது அதிகம் ஆகவில்லை; அதனால், அவருடைய அரச சபைக்கு வந்தவர்கள், "இந்தச் சிறு வயதுள்ள அரசன் நம்முடைய வழக்கைத் தீர்க்க முடியாது" என்று எண்ணினார்கள். இதை அறிந்த கரிகாலர், "ஜனங்களே, நீங்கள், கவலைப் பட வேண்டாம். சிறந்த ஒரு பெரியவர் உங்களுடைய வழக்குகளை விசாரித்து முடிவு செய்வார்" என்று சொல்லி விட்டு உள்ளே போய்விட்டார்.

பிறகு அவரே கிழவனைப் போல நரைத்த பொய்த் தாடியையும் மீசையையும் வைத்துக்கொண்டு, சபைக்கு வந்தார்; கிழவன் போல நடித்தார். அவர், வழக்கை நன்றாக விசாரித்துத் தீர்ப்புக் கூறினார்.

பிறகு கரிகாலர் கிழவன் வேஷத்தை மாற்றித் தம் சுய உருவத்துடன் தோன்றினர். அதைப் பார்த்த எல்லோரும் கரிகாலருடைய நுட்ப அறிவைக் கண்டு மெச்சினர்கள் ; அவரை மனமார வாழ்த்தினர்கள்.

கரிகாலர் மிகவும் புகழ்பெற்ற அரசர். அவர், சேர அரசனையும் பாண்டிய அரசனையும் தோற்கடித் தார். அவர் தமிழ் நாட்டில் வெற்றி பெற்றதுடன் இருந்து விடவில்லை. அவர், வட நாட்டிலுள்ள கங்கைக் கரைக்கும் சென்றார் ; அங்கிருந்து இமய மலைக்குப் போனர் ; இது போலவே, தென் கோடி யில் உள்ள இலங்கைத் தீவையும் கைப்பற்றினர். அங் கிருந்து இருபது ஆயிரம் சிங்களவரை அழைத்து வந்தார் ; அவர்களைக் கொண்டு காவேரி ஆற்றுக்குக் கரை கட்டுவித்தார்.

கரிகாலர், காவிரிப்பூம் பட்டினம் என்னும் ஒரு பெரிய துறைமுகப் பட்டினத்தை உண்டாக்கினர். அவர் காலத்தில் வர்த்தகர்கள் அதிக வியா பாரம் செய்தார்கள். கரிகாலர் ஏழைகளுக்குத் தர் மம் செய்தார் ; அன்ன சத்திரங்கள் கட்டினர் ; புலவர்களை அழைத்துப் பரிசுகள் கொடுத்துப் பெரு மைப் படுத்தினர். கற்றவர்களும் மற்றவர்களும் அவர் அரசாங்கத்தில் சுகமாக வாழ்ந்தார்கள்.

கேள்வி

1. கரிகால் சோழர் செய்த நன்மைகள் எவை ?

(2) இராஜ ராஜ சோழர்

கரிகாலருக்குப் பிறகு புகழ் பெற்றவர் இராஜ ராஜ சோழர். இந்த அரசர் காலத்தில் தஞ்சாவூர் தலை நகரமாக இருந்தது. இராஜராஜ சோழர் பாண்டிய அரசர்களையும், சேர அரசர்களையும் தோற்கடித்தார். இவர் குடகு, வெங்கி, கலிங்கம் முதலிய நாடுகளைக் கைப்பற்றினர். இவர் பெரிய வீரர்; மன உறுதி உடையவர். கரிகாலரைப் போல இவரும் இலங்கையை எதிர்த்துத் தம் வசப்படுத்தினர்; சாளுக்கிய அரசர்களைத் தோற்கடித்தார். இவற்றுடன் இவர் பல தீவுகளையும் தம் வசப்படுத்திக் கொண்டார்.

25. இராஜராஜ சோழர்

இராஜ ராஜர் கடவுளிடம் பக்தி கொண்டவர்; இவர் பல கோவில்களைக் கட்டினர். தஞ்சாவூரில் இவர் கட்டிய பிரஹதீஸ்வரர் கோவிலை இப்பொழுதும் காணலாம். இக்கோவிலின் மதில் சுவர்களில்

இராஜ ராஜர் வரலாறு எழுதப்பட்டு உள்ளது. இவர் பல கோயில்களுக்கு நிலங்களையும் ஊர்களையும் இனமாகக் கொடுத்தார்.



26. தஞ்சாவூர்—பிரஹதீஸ்வரர் கோவில்

கேள்விகள்

1. இராஜராஜ சோழர் கட்டின கோவில் எது?
2. அவர் செய்த தர்மங்கள் எவை?
3. அவர் ஜெயித்த நாடுகள் எவை?
4. அவரது தலைநகரம் எது?

(3) இராஜேந்திர சோழர்

இராஜேந்திரர் என்பவர் இராஜ ராஜ சோழருடைய புத்திரர். இவர் சிறு வயதிலேயே எல்லா வில் வித்தைகளையும் கற்றுக்கொண்டார்; வாள், வேல் முதலிய போர்க் கருவிப் பயிற்சியில் தேர்ச்சி அடைந்தார். இராஜேந்திரர் சிறுவராக இருந்த போதே தந்தையுடன் போரில் பழகி வந்தார். இவர் வேங்கி நாட்டை வென்றார்; விமலாதித்தன் என்னும் அரசனைக் கைதியாக்கித் தம் ஊருக்குக் கொண்டு வந்தார்.

இராஜேந்திரர் கல்வியில் தேர்ந்தவர். இவரைப் பண்டித சோழர் என்றும் சொல்வது உண்டு. அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்ற நான்கு நற்குணங்களும் இவ்வரசரிடம் பொருந்தி இருந்தன. இவர் மிகுந்த ஒழுக்கத்துடன் அரசு செலுத்தி வந்தார். 'முடி கொண்டான்' என்னும் காவிரியின் கிளை நதியை இந்த அரசர்தாம் வெட்டுவித்தார். தஞ்சாவூரே இவருடைய தலை நகரமாகவும் இருந்தது. இவர் சேர அரசனையும், பாண்டிய அரசனையும் போரில் தோற்கடித்தார். இவர் தம்மிடம் இருந்த பலம் பொருந்திய கப்பல் படையினால் இலங்கையை எதிர்த்துத் தாக்கினார். இலங்கை மன்னனால், இவரை வெல்ல முடியவில்லை.

உடனே அவன், இராஜேந்திரருக்குக் கப்பம் கட்டுவதாக ஒப்புக்கொண்டான்.

பிறகு இராஜேந்திரர் வட நாட்டின் மீது படை எடுத்தார்; பல அரசர்களைத் தோற்கடித்தார்; கங்கை ஆறும் யமுனை ஆறும் ஒன்று சேரும் இடத்தில் இருக்கும் அலகாபாத், காசி முத



27. இராஜேந்திரர் கங்கை நீரைக் கொண்டு வருதல்

லிய ஸ்தலங்களுக்குச் சென்றார்; மகிபாலன் என்ற அரசனைத் தோற்கடித்தார்; அவன் தலைமீது ஒரு பொன் குடத்தில் கங்கை நீரை ஏற்றி வைத்தார்; அவனுடன் சோழ நாட்டிற்குத் திரும்பினார். இதனால் இராஜேந்திரருக்குக் கங்கை கொண்ட சோழர் என்

னும் பெயர் உண்டானது. இவர் காவேரி ஆற்றின் வட கரையில் தம் பெயரால் கங்கை கொண்ட சோழ புரம் என்ற பெரிய புதிய தலை நகரைக் கட்டினர்.

கேள்வி

1. இராஜேந்திரரை ஏன் கீர்த்தி பெற்ற அரசர் என்று சொல்ல வேண்டும்?

(4) குலோத்துங்க சோழர்

இராஜேந்திரருக்குப் பிறகு புகழ் பெற்ற சோழ அரசர் குலோத்துங்கர். குலோத்துங்கர் சிறந்த வீரர். இவர் காலத்தில் சோழ அரசு மிகவும் சிறப்பு அடைந்தது; இவர் காலத்தில் தான் கம்பர் என்னும் சிறந்த புலவர் இருந்தார். அவர் இராமாயணத்தை இயற்றினர். அதற்குக் கம்ப ராமாயணம் என்பது பெயர். அதிலுள்ள தமிழ்ப் பாட்டுகள் காதுக்கு இனிமையாக இருக்கும். குலோத்துங்கர் தம் குடிகளை அன்புடன் ஆண்டு வந்தார்.

கேள்விகள்

1. குலோத்துங்கர் யார்?

2. கம்பர் யார்? அவரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

II. பாண்டிய நாடு

(1) சுந்தர பாண்டியர்

நமது நாட்டின் தென்புறத்தில் மதுரை, இராம நாத புரம், திருநெல்வேலி என்ற ஜில்லாக்கள் இருக் கின்றன. இந்த ஜில்லாக்கள் பழைய பாண்டிய அர சாங்கத்தைச் சேர்ந்தவை ஆகும். பாண்டிய அரசர்கள் மிக்க புகழ் பெற்ற அரசர்கள்; குடிகளின் நன்மைக்காகப் பெரிதும் உழைத்தவர்கள்; நற்குணங் கள் பொருந்தியவர்கள்.

பல வருஷங்களுக்கு முன் **சுந்தர பாண்டியர்** என்ற அரசர் மதுரையை ஆண்டு வந்தார். அவ ரைக் **கூன் பாண்டியர்** என்றும் சொல்வார்கள். அவர் சமண சமயத்தைத் தழுவி இருந்தார். அவருடைய மனைவியார் பெயர் **மங்கையர்க்கு**அரசி என்பது. அவர் சிவ பெருமானிடம் மிகுந்த அன்பு உடையவர். அக் காலத்தில் திருஞான சம்பந்தர் என்னும் ஒரு பெரிய சிவ பக்தர் மதுரைக்கு வந்தார். அந்தச் சமயத்தில் சுந்தர பாண்டியருக்குக் கடுமையான காய்ச்சல் வந் திருந்தது. அதைப் போக்கச் சமணர்கள் பலவித மந்திரங்கள் சொன்னார்கள்; நோய் நீங்கவில்லை. திருஞான சம்பந்தர் திருநீறு எடுத்து, 'மந்திர மாவது நீறு' என்னும் பாட்டைப் பாடிக்கொண்டே,

அரசர் மார்பிலும் முகத்திலும் பூசினர். உடனே காய்ச்சல் நின்று விட்டது. அதன் பின் அரசர் சைவ சமயத்தைச் சேர்ந்தார். அரசர் சைவ சமயம் தழு



28. திருஞான சம்பந்தர் அரசருக்கு விபூதி பூசுதல்

வியவுடன் பாண்டிய நாட்டில் சைவம் விரைவாகப் பரவலாயிற்று.

கேள்வி

1. திருஞான சம்பந்தர் பாண்டிய அரசருக்குச் செய்த உதவி என்ன ?

(2) திருமலை நாயக்கர்

சுமார் 300 வருஷங்களுக்கு முன் திருமலை நாயக்கர் என்ற மன்னர் மதுரையில் அரசு செலுத்தி வந்தார். இவர் முதலில் திருச்சிராப்பள்ளியில் வசித்து வந்தார். இவர் ஒருநாள் மதுரையில் நடைபெற்ற உற்சவத்திற்குப் புறப்பட்டார். போகும் வழியில் இவருக்குக் காச நோய் வந்துவிட்டது. மதுரை



29. மதுரை—பொற்றாமரைக் குளம்

மீனாக்ஷி அம்மன் இவருடைய கனவில் தோன்றினார்; "நீ, மதுரையில் வசித்தால் உன் நோய் தீர்ந்து விடும்" எனச் சொல்லி மறைந்துவிட்டார். நாயக்கர் மதுரையில் வந்து தங்கினார். இவருடைய நோயும் விலகிவிட்டது.

அதன் பின் இவர், மீனுக்ஷி அம்மன் கோவிலைப் பெரிய கோபுரங்களுடன் சிறப்பாக அமைத்தார். அந்தக் கோவில், சித்திரப் பதுமைகளும் அழகிய கல் தூண்களும் அடங்கியது; பார்ப்பவர்களுக்கு ஆச்சரி



30. திருமலை நாயக்கர் மஹால்

யத்தைக் கொடுப்பது. திருமலை நாயக்கர் பல லக்ஷம் பொன் செலவழித்துப் புது மண்டபம், ராய கோபுரம் முதலியவற்றைக் கட்டினர்.

இவர் ஒரு பெரிய அரண்மனே கட்டி, அதில் வசித்து வந்தார். அதற்குள் 'மஹால்' என்னும் கட்டடம் இருக்கிறது. அந்தக் கட்டடம் முழுவதும் செங்கல்லாலும் சுண்ணும்பாலுமே கட்டப்பட்டுள்ளது. தூண்களும் மேடைகளும் மிக்க அழகுடன் காணப்படுகின்றன. இவர் கட்டி வைத்த பெரிய தெப்பக் குளத்தையும் மதுரைக்கு அருகில் காணலாம்.

திருமலே நாயக்கர் குடிகளுக்குப் பல நன்மைகளேச் செய்தார்; நகரத்தை ஒழுங்காக அமைத்தார். இவர் பல வருஷங்கள் மதுரை நகரத்தை ஆண்டார்; தம் எழுபத்தைந்தாம் வயதில் இறந்தார்.

கேள்வி

1. மதுரைமா நகரத்தில் இருக்கும் அற்புதக் காட்சிகளில் இரண்டு சொல்.

(3) மங்கம்மாள்

திருமலே நாயக்கருக்குப் பிறகு கீர்த்தி பெற்ற அரசியார் மங்கம்மாள் என்பவர். இவர் மதுரையை ஆண்டு வந்தார். இந்த அரசியார் சொக்கநாத நாயக்கர் என்ற மதுரை அரசரின் மனேவியார். இவர் பேரர் சிறுவராக இருந்தார்; அதனுல் இவரே நாட்டை ஆண்டு வந்தார்.

மங்கம்மாள் அன்பும் திறமையும் உடையவர். ஜனங்கள் அக்காலத்தில் இராமேஸ்வரத்திற்கு யாத்திரை செய்வது வழக்கம். அவர்கள் மதுரை நகரத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டும். ஆகவே இராணியார், யாத்திரை செய்பவர்கள் தங்குவதற்காகப் பல பெரிய தெருக்களை அமைத்தார்; வழிகளில் பல சத்திரங்கள் அமைத்தார். இப்பொழுதும், மதுரைக்குச் செல்வோர், மங்கம்மாள் சத்திரத்தையும், மங்கம்மாள் சாலையையும் காணலாம். பிரயாணம் செய்யும் ஜனங்கள் இந்தச் சத்திரத்தில் தங்குவார்கள். இச்சத்திரம் இரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் இருக்கிறது. அதனால் இது, ஜனங்களுக்கு மிகவும் உபயோகம் உள்ளதாக இருக்கிறது. அரசியார் தண்ணீர்ப் பந்தல்களும் அமைத்தார்; ஏராளமான குளங்களையும் கிணறுகளையும் வெட்டினர்; ஜனங்களுக்கு எல்லா வித நன்மைகளையும் செய்தார்.

மதுரை நகரம், சென்னைக்கு அடுத்த பெரிய நகரம் ஆகும். இங்கே தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தப் பட்டு இருக்கிறது. இந்த நகரம் தமிழ் நாட்டுக்கு ஒரு திலகம் போல் விளங்குகிறது.

III. பல்லவ நாடு

நரசிம்ம வர்மன்

நாம் சோழ அரசர்களைப் பற்றி முன்பே படித்திருக்கிறோம்; பாண்டிய நகரமாகிய மதுரையில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் இராணி மங்கம்மாளைப் பற்றியும் படித்திருக்கிறோம்; இப்பொழுது பல்லவ அரசர்களைப் பற்றிப் படிப்போம்:



31. காஞ்சிபுரத்துக் கோயில்

காஞ்சிபுரம் சென்னைக்கு 45 மைல் தூரத்தில் இருக்கும் ஒரு புண்ணிய நகரம். இதனைக் 'காஞ்சி' என்றும் சொல்வது உண்டு. இங்குப் பல பெரிய

கோவில்கள் இருக்கின்றன. காஞ்சிபுரம் 'விஷ்ணு காஞ்சி, சிவ காஞ்சி' என்னும் இரண்டு பிரிவுகளை உடையது. விஷ்ணு காஞ்சியில் வரதராஜ ஸ்வாமி கோயில் இருக்கிறது. சிவ காஞ்சியில் காமாக்ஷி அம்மன் கோயிலும் ஏகாம்பர நாதர் கோவிலும் இருக்கின்றன. இவை தவிர, கணக்கில்லாத பல அழகிய கோவில்களும் உள்ளன.

காஞ்சிபுரம் பல்லவ அரசர்களின் தலை நகரம். பல்லவர்கள், தங்கள் ஆட்சியில், ஏராளமான கோயில் களைக் கட்டினார்கள். பல்லவ அரசர்களுள் மிகவும் சிறந்தவர் நரசிம்ம வர்மன் என்பவர். இவர் சேர, சோழ, பாண்டிய அரசர்களைத் தோற்கடித்தார்; சாளுக்கிய அரசனாகிய புலிகேசியையும் தோற்கடித் தார். இவர் காலத்தில் மஹாபலி புரம் மிகுந்த அழகான பட்டினமாக இருந்தது. மஹாபலி புரத் தில்தான் பல்லவ அரசர்களின் கப்பல் படை தங்கி இருந்தது.

மஹாபலி புரம் செங்கற்பட்டுக்குக் கிழக்கில் 18 மைல் தூரத்தில் இருக்கிறது. அங்குள்ள மலைப் பாறையில் அழகான சித்திர வேலைகளைக் காணலாம். கல்லில் செதுக்கின உருவங்கள் ஆச்சரியப்படத் தக்கவை. அங்குப் பல்லவ அரசர்கள் காலத்தில் ஏழு பெரிய கோயில்கள் இருந்தன. அவற்றில் 6 கோயில் கள் கடலில் மூழ்கிப் போயினவாம். அங்கு இப்

பொழுது ஒரே ஒரு கோயில் இருக்கிறது. அதனைக் கடற்கறை ஓரத்தில் காணலாம். அங்கே ஒரு பாறை மீது பெரிய விளக்குக் கூடு இருக்கிறது. அதனுடன்



32. கல் இரதங்கள்

புது விளக்குக் கூடு ஒன்றும் இருக்கிறது. இந்த நகரத்தைப் பார்த்தால், பல்லவ அரசர்களின் சிறப்பு நன்குகத் தெரியும்.

கேள்விகள்

1. எந்த ஊரில் பல்லவர்கள் சிறப்பைக் காணலாம்?
2. மஹாபலி புரத்தின் சிறப்பு என்ன?

IV. சேர நாடு

சேரன் செங்குட்டுவன்

நாம் இப்போது சேர அரசர்களைப் பற்றிப் படிப்போம் : அவர்களுடைய தலைநகரம் கரூர் என்பதாகும்.



33. செங்குட்டுவன் இமயத்திலிருந்து கல் கொண்டு வருதல்.

அந்த நகரத்தை 'வஞ்சி' என்றும் சொல்வதுஉண்டு. சேர நாட்டில் பல ஆறுகளும் காடுகளும் இருக்

கின்றன. அந்தக் காலத்தில் அங்குப் பல கோட்டைகளும் இருந்தன. அரசர்களுள் புகழ் பெற்றவர் செங்குட்டுவர் ஆவார். சோழ பாண்டிய அரசர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தார்கள். அவர் காலத்தில் பரணர், சாத்தனர் என்ற இரண்டு பெரிய தமிழ்ப் புலவர்கள் இருந்தார்கள். செங்குட்டுவர் இருபதாம் வயதில் பட்டத்திற்கு வந்தார். இவர் 55 வருஷம் அரசு புரிந்தார். இந்த அரசரின் தம்பியாகிய இளங்கோ அடிகள் பாடியதுதான் சிலப்பதிகாரம் என்னும் நூல். அதைப் படித்தால், செங்குட்டுவரின் வீரச் செயல்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.


34. கண்ணகித் தெய்வம்

இந்த அரசர் ஒரு முறை வட நாட்டிற்குப் பெருஞ் சேனையுடன் சென்றார்; அங்கு இருக்கும் ஆரிய அரசர்களை வென்றார்; இமய மலைக்குச் சென்று ஒரு பெரிய கல் எடுத்தார்; அதைக் கங்கையில் நீராட்டினர்; பிறகு தம் ஊருக்குத் திரும்பினர்; அக் கல்லைக் கோவலன் மனைவியான கண்ணகியின் உருவமாகச் செய்தார்; ஒரு பெரிய கோவிலைக் கட்டினர்; கண்ணகிக் கடவுளை அமைத்தார்.

இந்த அருஞ் செயலைப் பார்க்க இலங்கைத் தீவிலிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் பெரிய அரசர்கள் வந்தார்கள்.

இந்தப் பெரிய அரசர் வீரத் தன்மை உடையவர்; கடவுள் பக்தி உடையவர்; தமிழ் மொழியில் பற்று உடையவர்; புலவர்களுக்குச் சன்மானம் கொடுப்பதில் சிறுதும் பின் வாங்காதவர். இவர் பெரிய சேனை வைத்திருந்தார். சேர அரசர்களில் புகழ்பெற்ற அரசர் இவரே.

கேள்விகள்

1. செங்குட்டுவர் வட இந்தியாவில் என்ன செய்தார்?

2. அவர் கண்ணகித் தெய்வத்தை எப்படி அமைத்தார்?

17. புகழேந்திப் புலவர்

இந்தப் பெரும் புலவர் பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர். இவர் இளமைப் பருவத்திலேயே தமிழ் மொழியை நன்கு கற்றார்; பிறகு பாண்டியன் சமஸ்தானப் புலவராக இருந்து வந்தார். அக் காலத்தில், சோழன் சமஸ்தானத்தில் ஒட்டக் கூத்தர் என்னும் பெரும் புலவர் ஒருவர் இருந்தார்.

பாண்டிய அரசன் தன் மகளைச் சோழ அரசனுக்கு மணம் செய்து வைத்தான். அவளுடன் புகழேந்திப் புலவரும் சென்றார். சோழ நாட்டுப் புலவராகிய ஒட்டக் கூத்தர், பாண்டி நாட்டுப் புலவராகிய புகழேந்தியாரை இழிவு படுத்தச் சமயம் பார்த்து இருந்தார்; ஏதோ ஒரு பொய் சொல்லி, அரசனைக் கொண்டு புகழேந்திப் புலவரைச் சிறையில் இட்டார்.

ஒட்டக் கூத்தர் மிகவும் பொறாமைக் குணம் உள்ளவர். அவர், பல சிறு புலவர்களை வாதில் வென்று சிறையில் வைத்தார். அவர்கள் புகழேந்திப் புலவரிடம் சிறையில் தமிழைக் கற்றுக் கொண்டனர். புலவர்கள் சில கவிகள் பாடினார்கள். அரசன் சந்தோஷப்பட்டு அவர்களை விடுவித்தான். அவர்கள் புகழேந்தியாரை வாழ்த்திச் சென்றனர்.

அரசி, தன் ஆசிரியர் சிறையில் இருந்ததை அறிந்தாள்; அரசன்மீது கடுங்கோபம் கொண்டாள்; ஓர் அறைக்குள் போய்க் கதவைத் தாளிட்டு விட்டாள். அரசன் ஒட்டக்கூத்தரை அரசியிடம் அனுப்பினான். கூத்தர், அவள் கோபம் தணிய ஒரு பாட்டுப் பாடினார். ஆனால் அரசி, கதவைத் திறவாமல், மேலும் ஒரு தாழ்ப்பாளைப் போட்டாள்; "ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டேன்" என்று கூறினாள்.

அரசன் புகழேந்தியாரை அனுப்பினன். புகழேந்தியார் அரசியின் கோபத்தைப் போக்கி வெளியே வருமாறு பாடினர். அரசியும் தன் ஆசிரியர் குரலைக் கேட்டு மகிழ்ந்தாள்; கதவைத் திறந்து வெளியே வந்தாள். இச் செயல் ஒட்டக்கூத்தரின் கர்வத்தை அடக்கியது.



35. புகழேந்தியாரும் அரசியும்

பிறகு புகழேந்திப் புலவர் சோழநாட்டை விட்டு, வள்ளுவ நாட்டை அடைந்தார்; அங்கே 'நளன்—தமயந்தி' கதையை நள வெண்பா என்ற சிறந்த நூலாகப் பாடினர்.

கேள்வி

1. புகழேந்திப் புலவர் பெருமை எதனல் தெரிய வருகிறது?